ஜனவரி 26 - அரசியலால் திராவிடர்க்கு நன்மையில்லை

Phone No. 4502
விலை அணா ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.
MALAI MANI
(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (4—1—50) வெளியூர் (5—1—50) [இதழ் 134

---:0:---

ஏக கட்சிக் கொள்கைத் திட்டம் எங்களைக்கட்டுப்படுத்துவதுஎங்ஙனம்?

---(0)---

பலாத்காரம் என்று கூறி தொழிற்சங்க உரிமையைப் பறிப்பதா?

---:(0):---

சீன - இந்தோனேஷ்யா புத்தாட்சி மலர்ச்சிக்கு வாழ்த்து

திருச்சி மாநாட்டுத் தீர்மானங்கள்

திருச்சியில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக முதல் மாநாட்டில், ஆளவந்தார் கருத்தில் பதியவைத்து ஆவன அறிவுடம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கான பற்பல பொறுக்கான, இன்றியமையாத, அவசியமும் அவசரமுமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றுள்ளன. இன்றைய ஆட்சியாளரின் 'அததி பூத்தது' போன்றதான சிற்சில நற்காரியங்கள் பாராட்டி யேற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுடன், நாட்டு நலத்துக்கு மக்கள் முன்னேற்றத்துக்கு அமைதி, சமாதானத்துக்கு என்னென்ன தேவையென்பது திறம்பட தெரிவிக்கப்பட்டது மாநாட்டில்,

மாகாண ஆட்சி நிலை மட்டுமன்றி, இவ்வுபகண்ட நிர்வாகப் போக்குமட்டுமன்றி, உலக வல்லரசுகளின் பரதேச்சாதிகாரப்போக்கும் மாநாட்டாரின் பொறுப்புடை சாடுதலுக்குள்ளாகிற்று. புதிதாக மலர்ந்துள்ள சீனக் குடியரசும், இந்தோனேஷியக் குடியரசும் மாநாட்டாரின் மனப்பூர்வமான வாழ்த்துக்களைப் பெற்றன.

திருச்சி, ஜன. 2—

1—1—50-ல் திருச்சியில் நடைபெற்ற திருச்சி மாவட்ட திராவிட முன்னேற்றக்கழக முதல் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களின் முழு விவரம் வருமாறு:—

1. திராவிட சமுதாய விதலைக்கும், பொதுவாகக் கலைத் துறையிலும், பேருக்கப் காட்டிப் பணியாற்றவந்த விருதைத் தோழர் பெ. சி. சிதம்பரனார் மறைவுக்கு இம்மாநாடு வருந்துவதுடன், அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறது.

தலைவர்:— ஈ. வே. அ. வள்ளிமுத்து அவர்களால் எடுத்து மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

1-ஏ. திராவிடத்தின் தன்மானத்திற்குச் சலியாது உழைத்தவரும், நாடெங்கும் பிரசாரம் செய்து மக்களிடையே நல்ல பணியாற்றி வருமான நமது தளபதி அழகிரிசாமி, தன்மான வீரா உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம், சுயமரியாதை இயக்கத் தீவிரத் தொண்டர் ஜலகண்டபுரம் அர்த்தநாரி ஆகியோரின் மறைவுக்கு இம்மாநாடு வருந்துவதுடன், அவர்களின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறது. தலைவர் அவர்களால் எடுத்து மொழியப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

2. பலாத்கார இயக்கத்தை அடக்குவதென்ற காரணத்தைக் காட்டி, தொழிற் சங்கங்களின் உரிமையைப் பறிக்கும் வகையில் அவைகளுக்குத் தடை விதித்திருக்கும் அநீதியைக் கண்டிப்பதுடன், உடனடியாகத் தடையுத்திரவை ரத்து செய்ய வேண்டுமென்றும் இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது. மொழிந்தவர்:— அரங்கண்ணல்; வழிமொழிந்தவர்:— டி. பி. மூர்த்தி. நிறைவேறியது.

3. இலங்கையின் இன்றைய செழிப்பான நிலைக்கும், வளத்துக்கும், நெடுங்காலமாகவே பாடுபட்டு, அந்நாட்டு மக்களாகவே ஆகிவிட்ட தமிழர்களின் உரிமையை இலங்கை அரசினர், பறிக்கும் முறையில நடந்துகொள்வதை இம்மாநாடு கண்டிப்பதுடன், சென்னை-மத்திய ஆட்சியினர் இது விஷயமாகத் தக்க நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்துகிறது முன்மொழிந்தவர்:—எம். எஸ். இராமசாமி; வழிமொழிந்தவர்:—காஞ்சி மணிமொழியார்.

4. இந்நாட்டில் உணவு நெருக்கடியும், விலைவாசிகள் விஷம்போல் ஏறிவரும் கொடுமையும் வளர்ந்து வருகையில, பல கோடி ரூபாய்களை வடநாட்டு அகதிகளுக்கு நம் நாட்டில் செலவழிக்கும் அரசியலாரின் போக்கை இம்மாநாடு கண்டிக்கிறது. முன:—என் எஸ். இளங்கோ, வழி:—எஸ். முத்து.

5. அறநிலையங்களின் (கோவில்-மடம் முதலியன) சொத்துக்களை மக்களின் பொதுபோக்குக்கு ஆன கல்வி, வைத்தியம், தொழிற்சா

(தொடர்ச்சி 5ம் பக்கம் பார்க்க)

சிற்பிஸ்டாலினுக்குப்பின்கம்யூனிஸ்டு சாம்ராஜ்யத்தின் நிலை என்ன?

அடுத்த அரை நூற்றாண்டில் நடக்கப்போவதென்ன?

'டெய்லி கிராபிக்' இதழில் "ஜோஸ்யம்!"

லண்டன், ஜன. 3—

அடுத்த அரை நூற்றாண்டில் என்ன நடக்கக் கூடும் என்பதுபற்றி டெல்லி கிராபிக் பத்திரிகையின் பிரபல விமர்சகரான காண்டிடியஸ் கூறியிருக்கிறார்

மேற்கு நாடுகள் மிகவும் பலக்குறைவுற்றிருந்து வெற்றி எளிதில் இடைக்கும் என்று தோன்றினால் ஒழிய, ரஷ்யா போரில் இறங்காது என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

கம்யூனிஸ்டு சாம்ராஜ்யம் அதன் சிற்பிக்குப் பிறகு தலை தூக்கி நிற்கும் என்று தெரியவில்லை. ஸ்டாலினின் மரணத்திற்குப்பின் ரஷ்யாவில் பதவிப் பூசல் ஏற்பட்டு, ரஷ்ய ஆதிக்கமே சிதறுண்டு போய் விடும். லெனினுக்குப்பின் ஸ்டாலின் ஏற்பட்டதுபோல், பெரும் தலைவர்கள் பலரும் கலைதூக்குவர் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

இப்பொழுது ரஷ்யா சொல்படி ஆடும் நாடுகள் மீண்டும் தங்கள் சுதந்திரத்தையடையவே போகின்றன. ஆங்காங்குள்ள சோவியத் தலைவர்கள் தங்கள் சொந்த ராஜ்யங்களை ஏற்படுத்திக்கொள்வர்.

இதர விமர்சகர்கள், ஆசியா தலைதூக்க ஆரம்பித்துவிட்டதென்றும், சமீபத்திலேயே ஆசியாமீதுள்ள மேற்கு நாடுகளின் ஆதிக்கம் ஒழிந்துவிடும் என்றும் கூறியிருக்கிறார்கள்.

இந்திய விஞ்ஞானிகளின் 'காப்பியடிக்கும்' போக்கை சி. வி. ராமன் கடிகிறார்!

'தேசீய ஆராய்ச்சிக் கூடங்கள்' நிறுவினால் தீர்ந்துவிடுமா பிரச்னை?

நாட்டின் விஞ்ஞான நடவடிக்கைகள் தங்களது அடிப்படைத் தேவைகளுக்கேற்ற வாறு தீவிரமாகத் திருத்தியமைக்கப் பெறவேண்டுமெனப் பிரபல இந்திய விஞ்ஞானி சர். சி. வி. ராமன் பூனாவில் ஜன. 1-ந்தேதியன்று குறிப்பிட்டார். மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கேற்ப அவ்வண்ணம் நடவடிக்கைகளெடுக்கப் பெறாத பட்சத்தில், நாட்டுக்கு அழிவே வந்துருமென அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர். சி. வி. ராமன் மேலும் பேசுகையில், இந்திய விஞ்ஞானிகள் பெரும்பான்மையரின் விஞ்ஞான ஆராய்ச்சி வலைகள் ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் நடைபெறும் வேலைகளின் மறு பதிப்புகளாகவே இருக்கின்றனவென்றும், தங்கள் பிரச்னைகளைத் தனிப்பட்ட முறையில் தீர்த்துக்கொள்ளவே இந்திய விஞ்ஞானிகள் முயல வேண்டுமென்றும், விஞ்ஞானப் பிரச்னைகள்—நாட்டுப்புறப் பகுதிகளில்—தீரவேண்டியவை பல இன்னுமிருக்கின்றனவென்றும், 'தேசிய லேபோரேட்டரிகள்' அமைப்பதின் மூலம் இப்பிரச்னைகளைத் தீர்த்துவிடமுடியாதென்றும், நாட்டுப்புற பகுதிகளுக்குச் சென்று, பிரச்னைகளைப் பரிசிலனை செய்து தீர்க்க முற்படவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பார்மோஸாவைப் பாதுகாக்கும் பிரச்னையில் ட்ரூமன் பேரம்பேசுவார்!

உதவி குறிப்பிட்ட அளவுக்குத்தானிருக்குமாம்

லண்டன், ஜன. 3—

கம்யூனிஸ்டுகளிடமிருந்து பார்மோஸாவைக் காப்பாற்ற யுனைடெட் ஸ்டேட்ஸ் எப்படியும் உதவி செய்ய முன் வரும் என்றாலும், உதவி ஒரு குறிப்பிட்ட அளவுக்கே இருக்கும் என்று தெரிகிறது.

இந்த உதவியை சியாங் எப்படி உபயோகிக்க வேண்டும் என்பதை யு. எஸ். ராணுவத் தூதுக் குழு சியாங்கிற்கு எடுத்துச் சொல்லும் என்றும் கூறப்படுகிறது.

பார்மோஸாவில் போர் ஏற்பட்ட பின்போ, அல்லது படையெடுப்பு நிச்சயம் என்பது தெரிந்த பின்போ தான் யுனைடெட் ஸ்டேட்ஸ் இவ் விஷயத்தில் தலையிடலாம் என்றும், தனனை ஆக்கிரமிப்பாளர் என்று சொல்ல முடியாதபடி நடந்துக் கொள்ளும் என்று டைம்ஸ் கூறுகிறது. பார்மோஸாவிலுள்ள சியாங் படைகள் போதிய ஆயுத சாதனங்களுடன் இருப்பதாகவும், சியாங்கிடம் பலமான கடற்படை இருக்கிறதென்றும் ராணுவ விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

தான் அளிக்கப்போகும் உதவிக்குப் பதிலாக பார்மோஸாவிலுள்ள தளங்களை யுனைடெட் ஸ்டேட்ஸ் உபயோகத்திற்கு விட்டுவிடும்படி சியாங்குடன் ட்ரூமன் பேரம் பேசலாம் என்று தெரிகிறது.

ஆனல் இதற்கு சியாங் ஒப்புக் கொள்வார் என்று தெரியவில்லை அப்படி ஒப்புக்கொண்டால் ரஷ்யா நிச்சயமாக பார்மோஸ படையெடுப்பில் கலந்துகொள்ளும் என்ற பீதி சியாங்கிற்கு இருக்கிறது.

அமெரிக்க உதவி கிடைக்கலாம் என்று தெரிவதால், கொஞ்ச காலத்திற்குப் பார்மோஸாபடையெடுப்பை யாரேதும் ஒத்திப்போடலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாலை மணி

சென்னை 4—1—50 புதன்கிழமை

விஞ்ஞானமே; ஆத்மார்த்தம் அல்ல!

"மக்களின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடியவர்கள், சட்ட அறிஞர்களோ, அல்லது பாண்டியத்தியம் மிகுந்த தத்துவாசிரியர்களோ அல்ல. பிரச்சினையைத் தீர்க்கக் கூடியவர்கள் விஞ்ஞானிகளும் எஞ்ஜினியர்களுமேயாவர்கள்" என்ற பொன்மொழியை, இந்தியப் பிரதமர் பண்டித நேரு, இந்திய விஞ்ஞானக் காங்கிரஸின் 37-வது மாநாட்டில் பேசும் போது குறிப்பிட்டுள்ளார்.

பண்டித நேருவை, நிலைமை அப்படி பேச வைக்கிறதோ அல்லது உள்ளபடியே உணர்ந்து அவ்வாறு கூறுகிருரோ அறியக்கூடவில்லை! எப்படியாயினும், அவரது கூற்று, காலத்திற்கேற்ற அரிய கருத்தாகும்.

மக்களின் இருண்ட வாழ்வை, ஒளியுடையதாக்கவும், இழிந்த வாழ்வை உயர்வுடையதாக்கவும், ஆன அரிய ஆற்றலைக் கொண்டிருப்பது, அறிவின் வழிப்பட்ட விஞ்ஞானமேயல்லாது, அறியாமையின் வழியமைந்த ஆத்மீகம் அல்ல. ஆத்மீகம் மக்களின் கஷ்ட நஷ்டங்களை இதுநாள் வரையில், உலகில், எங்ஙனும் போக்கியதில்லை; போக்க முயன்றதில்லை; முயன்று வெற்றி கண்டதில்லை, இன்றைய உலகம், இந்த அளவுக்காவது காட்டுமிராண்டி காலத்திலிருந்து நகர்ந்து வந்திருக்கிறதென்ருல், அது விஞ்ஞானத்தின் விளைவேயன்றி வேறல்ல.

இற்றைநாளில், உலகில், எந்தநாடு, கற்பனையில் பிறந்து வளர்ந்து வரும் ஆத்மீகத்தை ஒதுக்கிவிட்டு, கண்ணிற்கும் மற்றப்புலன்களுக்கும் காணப்படுவதாக அமைந்துள்ள விஞ்ஞான வழியைக் கடைப்பிடிக்கிறதோ அந்த நாடுதான் சிறந்த நாடாக இலங்குகின்றது. இந்தியத்துணைக்கண்டம் மிகுந்த இருட்டிலும், இழிவிலும் அழிந்து கிடப்பதற்குக் காரணம், வேண்டப்படும் விஞ்ஞான அறிவு வளராமலிருப்பதும். வேண்டப்படாத ஆத்மீக அறிவு அளவுக்கு மீறி வளர்ந்திருப்பதுமேயாகும். இக்காரணம் பற்றிதான், இங்குள்ள பகுத்தறிவாளர்கள், இந்தியத் துணைக்கண்டத்தின் எதிர்காலம், நன்னிலை எய்த வேண்டுமானுல், ஆத்மீக உணர்ச்சி அடியோடு அழிக்கப்பட்டு, விஞ்ஞான அறிவு வளர வேண்டும் என்று கூறி முதலில் அறிவுப் புரட்சி வேண்டி நிற்கின்றனர்.

விஞ்ஞான மாநாட்டில் பண்டித நேரு ஒப்புக்கொள்கிருர், மக்களின் வாழ்க்கை நெருக்கடிகள் தீரவேண்டுமானின், அதற்குரிய வழி விஞ்ஞான வளர்ச்சியே யன்றி, ஆத்மீகத் தத்துவார்த்த வளர்ச்சி அல்ல என்று வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகளை, விஞ்ஞானத்தால்தான் தீர்க்க முடிகிறது; விஞ்ஞானம் தான் தீர்த்து வருகிறது; விஞ்ஞானந்தான் தீர்க்கும் என்ற கருத்தை, நாளடைவில், மேலும் மேலும் ஏற்றுக் கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன் என்று நேரு கூறுகிருர், பாராட்டவேண்டிய பண்பு! அதேசமயத்தில், இந்த நாட்டை இருண்ட நிலையிலேயே வைக்கும் படியான ஆத்மீக உணர்ச்சியை வளர்த்தும், விஞ்ஞான அறிவை மறுத்தும் கூறும் பழக்கத்தைப், பரம்பரைப் பண்பாகக் கொண்டு விட்டத்தலைவர்களுமிருக்கிருர்கள், அன்பர் ஆச்சாரியாரைப் போன்றவர்கள். ஆச்சாரியார். "கண்ணன் காட்டிய வழியை" மக்களுக்குக் காட்ட இன்னமும் தவறுவதில்லை! ஆச்சாரியாரும் அவர்போன்ற ஏனைய வைதிகக் காங்கிரஸ் தலைவர்களும் ஆத்மீக உணர்ச்சியின் பெருமையைப்பேசி, அதன் அவசியத்தை வளர்த்தியவண்ணமே தான் இன்னமும் இருக்கின்றனர்.

ஆச்சாரியார் கூறுகிருர் ஆத்மீக உணர்ச்சியின் வளர்ச்சியைப்பற்றி; பண்டித நேரு கூறுகிருர் — விஞ்ஞானத்தின் அவசியத்தைப் பற்றி. ஆத்மீகம், —விஞ்ஞானம், இந்த இரண்டில் எது நாட்டின்—மக்களின் நலிவைப்போக்கும் என்று கேட்டால், தோழர் ஆச்சாரியார் ஆத்மீகம் பக்கம் சாய்கிருர்; தோழர் நேரு விஞ்ஞானம் பக்கம் இருக்கிருர்.

ஆத்மீகத்தை ஒரு பக்கம் ஆதரித்துக் கொண்டு, மற்ருெரு பக்கம் விஞ்ஞானத்தின் பெருமை பேசித் திரியும் 'இரட்டை நாக்கு', 'இரட்டைப் பேச்சு', 'இரட்டை வாழ்வு' உடையோரும் வைதிகக் கோட்டையில் இருக்கத்தான் செய்கிருர்கள்!

"மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களை எண்ணுவோமேயானுல் அப்பொழுது, பொருளாதார நெருக்கடிகள் கிளம்புகின்றன. இந்தியாவிலிருக்கும் நாம், பல வழிகளிலும் மிக மிகத் தாழ்வான நிலைமையிலிருக்கிருேம். நம்முடைய பிரச்சினைகளை நாம் தீர்க்க வேண்டியவர்களாக இருக்கிருேம். கஷ்டநஷ்டங்களைத் தாண்டிச் செல்ல வேண்டியவர்களாக இருக்கிருேம். இதற்கு நாம் விஞ்ஞானிகளின் உதவியை எதிர்பார்க்கிருேம்." என்று தோழர் பண்டித நேரு விஞ்ஞானத்தின் தன்மையையும், அதன் ஆற்றலையும் விளக்கும் போது குறிப்பிடுகிருர்.

மக்கள் தம் வாழ்க்கையை விஞ்ஞான ரீதியில் நடத்திச் செல்லும் மனப்போக்கு உடையவர்களாக மாறினுல்தான், வாழ்க்கையில் போதுமான அளவு இன்பத்தைத் துய்க்க முடியும் என்பதை, விஞ்ஞான மாநாட்டைத்துவக்கி வைத்தத் தோழர் டாக்டர் சியாமபிரசாத் முகர்ஜி தம் சொற்பொழிவில் அழகாகத் தெளிவுடன் குறிப்பிட்டிருக்கிருர்.

"விஞ்ஞான ரீதியில் வாழ்க்கையையும் அதன் பிரச்சினைகளையும், அணுகும் மனப்போக்கை மக்களுக்குப் புகுத்துவதே இந்தியாவுக்கு விஞ்ஞானிகள் செய்யக் கூடிய மிகப்பெரிய சேவையாகும். சமுதாய நல் வளர்ச்சிக்கும், விவசாயத் தொழில் வளர்ச்சிக்கும் விஞ்ஞான அறிவைப் பயன்படுத்துவதற்கு, மேற்படி மனப்பாங்கு இன்மையைவிட பெருத்த இடையூறு வேறொன்றுமில்லை."

என்று அவர்குறிப்பிடுகிருர். விஞ்ஞான அறிவைப் பயன்படுத்தும் மனப்பாங்கு மக்களுக்கு ஏற்பட்டுவிட்டால், மக்களின் நேரத்தையும் நினைப்பையும், உழைப்பையும், அறிவையும், ஆற்றலையும் பாழ்படுத்திக் கவைக்குதவாதனவாகச்செய்துவரும் ஆத்மார்த்தத்துறைகள் அனைத்தும் தாமாக ஒழிந்துவிடும். அவைகள் ஒழிந்துவிட்டால். கற்பனைப் போலி வாழ்வுபோல், பொலிவுள்ள இன்பவாழ்வு பிறக்கும்,

இந்திய விஞ்ஞான மாநாட்டில் மந்திரிமார்கள் இருவரும் தாம் பேசிய பேச்சை, விஞ்ஞானிகள் மெச்சுவதற்காக மட்டும்பேசியபேச்சாகநிறுத்தி விடாமல், தங்கள் ஆணைக்குட்பட்ட அனைத்துத் துறைகளிலும், விஞ்ஞான அறிவோடு காணும் பண்பை செயலாக மாற்றிக்காண்பிக்க முன்பட்டால்தான், அந்தப் பேச்சுக்கு ஏதாவதுபொருள்இருப்பதாகக் கொள்ளமுடியும்,

இது விஞ்ஞானகாலம்; விஞ்ஞானந்தான வாழ்வு அளிக்கும்; ஆத்மீகம் ஆண்டகாலம் மறைந்துவிட்டது: இருண்ட காலத்திலே ஆத்மார்த்தம் ஆர்ப்பாட்டம் செய்தது; இப்பொழுது விஞ்ஞானம் உலகிற்கு ஒளி ஊட்டி வருகிறது. ஆத்மீகம் ஒழிந்தே தீரும் அழிந்தே தீரவேண்டும்.

எனவேதான், பகுத்தறிவாளர்களின் வரிசையில்நின்று பண்டித நேரு விஞ்ஞான மாநாட்டில் பேசும்போது வாழ்க்கைக்குவழி அமைப்பது விஞ்ஞானமே **ஆத்மார்த்தம் அல்ல!** என்று முழங்கிய முழக்கம் திக்கெட்டும் கேட்கட்டும்! எங்கும் கேட்கட்டும்; எப்பொழும் கேட்கட்டும்! என்று கூறி மகிழ்ச்சி கொள்ளுகிருேம்!

பாவ்டே படைகளுடன் ஹோசிமின் துருப்புகள் கைகலப்பு

சைகோன், ஜன. 3—

டோங்கிங்கில் பாவ்டே படைகள் மீது ஹோசிமின் படைகள் தாக்க ஆரம்பித்துவிட்டன. இந்தப் பிரதேசத்தில் பாதுகாப்பு பொறுப்பு ஏற்றது ஒரு வெறும் வேலைவீரராக பிரெஞ்சுகள் கருதுகின்றனர். பாவ்டேயின் புது ஆட்சியை இராஜரோன் அங்கீகரித்துவிட்டான், அந்நாடுகளிலிருந்து உதவி பெற்றுவிடலாம் என்று பிரெஞ்சு அதிகாரிகள் மனக்கோட்டை கட்டி வருகின்றனர்.

"அகண்ட இந்துஸ்தான்" என்பது அர்த்தமற்ற பிரச்னை

—:(o):—

இந்துமகாசபையினர் பேச்சைக் கேட்டு ஏமாந்து விடாதீர்!

—(o)—

பண்டித நேரு எச்சரிக்கை

இந்தியாவுக்கு கஷ்டமானமான பெரும் பிரச்னைகளைச் சமாளிக்க வேண்டியிருக்கிறதென்றும் அதைவிடப் பெரிய பிரச்சினைகளை பாகிஸ்தான் சமாளிக்க வேண்டியிருக்கிறது. பாகிஸ்தானை இந்தியாவுடன் சேர்ப்பது பற்றி யாராவது பேசினுல், கஷ்டங்கள் தான் அதிகரிக்கும். இத்தகைய இலட்சியம் பொருளற்றது என்பதையும், அசாத்தியமானது என்பதையும் இந்துமகா சபைத் தலைவர் அறிந்திருந்தும், மக்கள் கவனத்தை வேறு பக்கம் திருப்பி அவர்களைத் தவருன வழியில் செலுத்துவதற்காகவே இந்த இலட்சியத்தைவெளியிட்டிருக்கிருர்."

என்று இந்துமகா சபைத் தலைவர் சமீபத்தில் வெளியிட்டதற்கு கருத்தைக் கண்டித்து பண்டித நேரு அலகாபாதில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசியிருக்கிருர்.

இந்துமகா சபைத் தலைவரைக் கண்டிக்குமோபோது ஏறத்தாழ நின்றுவிடவில்லை பண்டிதர். மேலும் ஒருபடி சென்று,

"இது மிகவும் அபாயகரமான பிரசாரம். சாத்தியமற்ற இத்தகைய பேச்சுக்களைக் கண்டு மக்கள் ஏமாறாமல் இருக்க வேண்டும்" என்றும் கூறியிருக்கிருர்.

பண்டிதரின் இத்தகைய பேச்சை கருத்துள்ளோர் அனைவரும் வரவேற்பர் என்பது திண்ணம். இந்துமகாசபையினரின் பேச்சு நாட்டுக்குத் தீமை பயக்கவல்லது என்பதை நாம் அறிந்திருக்கும் அளவுக்கு பண்டிதர் அறிந்திராவிட்டாலும், பாகிஸ்தானுடன் இந்தியா உறவு கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து விட்டு அப்பிரச்னையை சமாளிக்கக்கூடிய விதத்தில் இந்துமகா சபையின் நோக்கத்தை மறுக்கக் கண்டிக்க முன்வந்திருக்கிருர். அந்த அளவில் அவரைப் பாராட்ட வேண்டியதே.

உண்மையில் கல்காத்தாவில் காண்கிறோம். அதுபோதுவில் இந்துமகா சபையின் நோக்கத்தை

மூர்க்கத்தனமானது என்பதை, இரு சாராரும் உணர்கிருேம்.

எனவே, பண்டிதரின் கருத்துப்படி இந்துமகாசபையின் நோக்கம் அபாயகரமானது என்பதை தேசிய தோழர்களும், உணர்ந்து இந்து மத ஏகாதிபத்தியத்தை முறியடிக்க திராவிடர் இயக்கத்தாரோடு ஒத்துழைக்க வேண்டுகிருேம்.

'பண்டித நேரு கூட இந்து மகாசபையைக் கண்டிக்கிருர் பாருங்கள்!' என்று வாய்ப்பறை சாற்றுவதோடு நின்றுவிடக்கூடாது தேசியத் தோழர்கள், அதுபோலவே, "இந்துமகாசபையின் கொள்கைக்கு நேருஜி சாட்டை!" என்று கொட்டை எழுத்துக்களில் போட்டுவிட்டு திருப்தி அடைவதோ நில்லாமல், தேசிய பத்திரிகைகள். பண்டிதரின் உள்ளக்கிடக்கையை உணர வேண்டும். உணர்வதற்கு அறிகுறியாக அவர் கூறியிருப்பதுபோல் இந்துமகாசபையிடம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். திராவிடர்களைப் பொறுத்தவரையில் அது மட்டும் போதாது. இந்துமகா சபையின் கொள்கையை எதிர்த்துப் போராட வேண்டியதும் அவசியமாகும் என்பதை வலியுறுத்திக் கூறுகிருேம்.

நடைபெற்ற இந்துமகா சபை மாநாட்டில் டாக்டர் கரே "அகண்ட இந்துஸ்தான்" பிரச்னை பற்றி பேசியிருந்ததை அப்போதே நாம் கண்டித்திருக்கிருேம். அகண்ட இந்துஸ்தான் பிரச்னை ஆரிய ஆதிக்கத்துக்கு வழிகோலும் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளோம் அன்றும் நாம் ஆரிய—திராவிட பிரச்னையாக அதனை மக்களுக்கு விளக்கிக் காட்டினோம்; அதே பிரச்னையை இந்து—முஸ்லிம், அல்லது இந்தியா—பாகிஸ்தான் பிரச்னையாக எடுத்துக்காட்டுகிருர் நேரு. ஆம், நியாயந் தானே அவர் சொந்த நிலையிலிருந்து தானே அவர் பிரச்னையைக் காண முடியும்! ஆனால், நாம் காணும் நேரு அதனை இந்து—முஸ்லிம் பிரச்னையாகக் காண்கிருர். திராவிடர்களான நாம் அதனை ஆரிய—திராவிட பிரச்னையாகக்

காரைக்குடி
தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

8-1-50 ஞாயிறு மாலை 5-மணிக்கு காரைக்குடி காந்தி சதுக்கத்தில்

தோழர்

பி. பழனிச்சாமி

அவர்கள் தலைமையில்

தோழர்:

சி. என். அண்ணுத்துரை

தோழர்:

என். வி. நடராசன்

ஆகியோர் பேசுவார்கள்

அறிவுக் கதிர்!

மக்களுக்கு உரிமைகள் யாவும் வழங்கும் அரசாங்கமே நியாயமான அரசாங்கமாகும். இனி பகேச்சாதி காரத்திற்கோ, சிலரின் விசேஷ உரிமைகளுக்கோ இடமில்லை. அடக்கு முறைகளினின்று விடுதலை பிறக்கும் சுதந்தர உணர்ச்சி அனைவரின் உள்ளத்திலும் உள்ளது. எழுத்தின் மூலம் அது அறிவாளிகளின் உள்ளத்தில் புகுந்துகிளர்ச்சி செய்கிறது கொங்கோலாட்சியால் அது மக்கள் உள்ளத்தில் புகுந்து புரட்சி செய்கிறது. சுதந்தரம் வானின் மதலைகளை என்பதை மக்கள் உணர்வர். மக்கள் அனைவரும் விழித்தெழும் நாள் தொலைவில் இல்லை

— ரெயினல்

[கற்பனை உரையாடல்:]

கண்டதும் கேட்டதும்

[தப்பறிவோன்]

உரையாடுவோர்: திருவாளர் திருவேங்கடசாமியும் அவரது அத்யந்த நண்பர் ஒருவரும்.

இடம்: திருச்சியில் ஒரு பத்திரிகை அலுவலகம்

காலம்: காலை மணி சுமார் 9

[திருவாளர் திருவேங்கடசாமி ஆழ்ந்த சிந்தனையோடு தனது ஆசனத்தில் அமர்ந்திருக்கிறார். மேசை மீது சில பத்திரிகைகள் விரிக்கப்பட்டுக் கிடக்கின்றன. ஒரு புறம் கண்ணாடி டம்ளரில் சூடான டீ வைக்கப்பட்டிருக்கிறது. திருவாளரின் ஒரு கரத்திலே சிகரெட் புகைந்து கொண்டிருக்கிறது. மற்றொரு கரம், அடர்ந்து திரண்டிருக்கும் அவரது மீசையை முறுக்கிக்கொண்டேயிருக்கிறது. இச்சமயத்தில் அவரது நண்பர் அவ்விடம் வருகிறார் அதன் பிறகு...—]

நண்பர்: வணக்கம் சார்!

திருவாளர்: ஓ! வணக்கம் வணக்கம்; வாங்கோ உட்காருங்கோ.

நண்: என்ன யோசனை ரொம்ப பலமாயிருக்காப் போலிருக்கே!

திரு: (சிகரெட்டை ஒரு முறை பிடித்து புகைவிட்டுக் கொண்டே) அப்படி ஒன்றுமில்லண்ணே......சும்மா நியூஸ் பார்த்துக் கிட்டிருக்கேன்.

நண்: என்ன விசேஷம்...... மகாநாடு செய்திகள் ஏதாச்சு உண்டா?

திரு: இதென்ன என்னைக் கேட்கிறீங்களே... உங்களுக்குத் தெரியாதா! நான் ரெண்டு நாளா வெளியே தலைகாட்டாமல் இருக்கிறேனே!

நண்: மகா நாட்டைப் பத்தியா கேட்கிறீங்க... எல்லாம் நமக்குத் தெரிஞ்ச விஷயந்தானே ரொம்ப வெற்றிகரமாகத்தான் நடந்திருக்கு!

திரு: உம்! உம்! (நண்பர் பக்கம் கண்ணைத் திரும்பி உட்கார்ந்துகொண்டு, ஆபீஸ் பையனைக் கூப்பிடுகிறார்) டேய் நாராயணா!

பையன்: சார்!

திரு: போயி ஒரு டீ வாங்கிட்டு வா.

நண்: சும்மா இருக்கட்டுங்க இப்பத்தான் காப்பி சாப்பிட்டு வந்தேன்....

திரு: இருக்கட்டும் இதையும் சாப்பிட்டு வைக்கலாமேன். (டீ வருகிறது; நண்பர் டீ அருந்தியபின் உரையாடல் தொடர்கிறது) உம்! அப்புறம்? கூட்டம் எப்படி?

நண்: ஏராள கூட்டம்!

திரு: நம்ப காங்கிரஸ்காரங்களுக்கு வந்த அளவு இருக்குமா?

நண்: நே...நோ... அது ஒரு கூட்டமா? இது பிரமாதமான கூட்டம்; சும்மா சொல்லப்படாது!

திரு: என்ன ஒரு டென் தவுஸண்ட் இருக்குமா?

நண்: அதுக்குமே மேலே இருக்கும். பதினைஞ்சாயிரத்துக்கு மேலே சொல்லலாமே யொழிய அதுக்குக் குறையாது.

திரு: உச்! உச்! வெளியே என்ன பேசிக்கிறாங்க நம்மைப்பற்றி ஏதாச்சும் பயங்கரமா?

நண்: சரியாச் சொன்னீங்க! இந்த மையை நம்ம ஜெயில அலை மாத்தினது!

திரு: ஆமா, ஆமாம்; அது தான் தெரிஞ்ச விஷயமாச்சே! இதுதான் எல்லா காலமும்...நாடினை பேசுவது இருக்கு...இந்த சமயத்திலே போயி அந்தம் மதித்தவனாகார இழவன் இப்படிச் செய்வானா?

நண்: இதென்ன சார் இப்படி சொல்றீங்களே!

திரு: பின்னே எப்படி சொல்ல சொல்றீங்கோ. அவன் செய்தது தவறு, முட்டாள் தனமின்னு எனக்கு மட்டும் தெரியாதா அண்ணே! இவங்களெப்பெல்லாம்விட எனக்கு அவன் சமாச்சாரம் நல்லாத் தெரியுமே!

நண்: அப்படி தெரிஞ்சுங்க அப்படி கண்ணை மூடிட்டு அவனை சப்போர்ட் பண்ணிங்க?

திரு: வேறே என்ன செய்யச் சொல்றீங்க...இதுதானே சமயம், நாம் உள்ள நுழையறதுக்கு! அது மட்டுமில்லே தேசத்திலே மேற்படியார் கம்பனியெல்லாம் ஒழிச்சுக் கட்டணுமே, அப்படின்னுட்டவனை நான் இப்போ ஒழிச்சுப்பிடலாமின்னு பார்த்தேன். அவ்வளவுதானே யொழிய வேறே ஒண்ணுமில்லேண்ணே.

நண்: ஆமா சார், ஆமாம் நீங்க சொல்றதும் சரிதான் சார். அவரும் ஐயாவும் சேர்ந்து கிட்டுதானே எஸ்.ஐ.எல்.எப். (SILF) ஐ ஏற்படுத்தினீங்க.

திரு: ஆமாண்ணே, அதை நினைச்சுதானே இவ்வளவு தூரம் எழுத ஆரம்பிச்சேன் இல்லாவிட்டா, இடையிலே இழே வச்சு வேணுமென திரும்ப எடுத்து அவ்வளவு அழுத்தந்தனமா பேசிச்சிருப்பேனா?

நண்: அது சரித்தானம் கூடநாம் கண்டிக்கலேன் ஒப்பில்லியே!

திரு: என்னமா இருக்க முடியும்? நமக்கே மனசாரத் தெரியுமே, ஐயா செய்த காரியம் தப்புன்னு. அப்படியிருக்கச்சே, அவனை நோக்கிட்டு உசிலே இடிக்கிற மாதிரி என்னென்னமோ எழுதித்தொலைச்சேன், ஆனால், கலந்து கைகொடுக்க மாட்டேனுட்டு. அதுக்கு யார் என்ன செய்ய முடியும். உம், சரி, போனது போகட்டும்! மற்ற விஷயத்தைக் கவனிப்போம், புதுக்கழகம் எப்படி வேலை செய்யுமென்று நினைக்கிறீங்கோ.

நண்: அதுக்கென்ன சார்! உங்க மோதிற போக்கை பார்த்தா ஏதாச்சும் இட்டு மோரட்டு வேலை செய்வாங்க போலத்தானிருக்கு.

நான் தான் வீணா யோசனை கேட்டுக்கிட்டு ஒண்ணுக்கு ரெண்டு தரம் இரு இடமும். சரி நேரம் ஆக நான் போயிட்டு வரட்டுமா. நீங்க இருக்காங்களா மாட்டாங்க. வழக்கம் போல ஏதாச்சும் எழுதிட்டே இருங்கோ. முன்னைச் சொன்னத பின்னைக்குக் கூடாதுன்னு பார்த்துங்கோ! அதுவும் போவேண்டாட்டாம் போல்; சிங்கத்தின் வேஷம் வைச்சிகிட்டிருக்கு இருங்கோ. சிங்கத்துக்கு பங்கமாயமே!

திரு: அட, இதுக்கெல்லாம் பயந்தா நடக்குமா! நீங்க போங்கண்ணே, நம்ப வேலைக்கு என்னைக்கும் வெட்கமோ, துக்கமோ கிடையாது. அது பாட்டுக்கு நடக்கும் கண்ணியத்தோடு தனியிருக்கும்! நம்ம வேலை பிஸினெஸ் தான் உங்களுக்குத் தெரிஞ்ச விஷயமாச்சே!

ஜெர்மன் மாதின் சோகக் கதை!

டஸ்ஸல், ஜன. 3—

ட்ராப்ரேடார்னுகர் என்ற ஜெர்மன் மாது தன் கணவன் ருஷ்ய சிறை முகாமில் இறந்துவிட்டார் என்ற செய்தி கிடைத்ததின் பேரில் மற்றொருவரை மணந்து கொண்டார்.

ஒருநாள் இறந்துபோனதாகக் கருதப்பட்ட தன் கணவன் உயிரோடிருப்பதாகவும் அவர் திரும்பி வருவதாகவும் அவளுக்குச் செய்தி கிடைத்தது.

தன் முதல் கணவனை வரவேற்பதற்காக அவர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றார், நீண்டகாலமாக பிரிந்திருந்த கணவன் மனைவி சந்தித்ததால் உணர்ச்சி பெருக்குதாங்காமல் அவளுடைய கணவர் மாண்டார்.

கணவனை இழந்த இவர் வீடு திரும்பியபோது தன்னுடைய இரண்டாவது கணவர் தூக்கு போட்டுக்கொண்டு மாண்டிருப்பதைக் கண்டார். —ஞோப்.

ஜாப் சமாதான நகல் உடன்படிக்கை

லண்டன், ஜன. 3—

வாஷிங்டனில் தயாரிக்கப்பட்ட ஜப்பானிய சமாதான நகல் உடன்படிக்கை குறித்து காமன்வெல்த் மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று தெரிகிறது.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகளை ருஷ்யா இல்லாமலேயே நடத்தவேண்டுமென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த விஷயமான பேச்சுகளில் இந்தியா பாகிஸ்தான் இந்தோனேஷியாவும் கலந்து கொள்ளும்.

கம்யூனிஸத்தை எதிர்க்கும் ஆசிய நாடுகளுக்கு உதவ பிரஸிடெண்ட் ட்ருமன் வகுத்துள்ள திட்டம் மிகவும் விரிவானது என்றும் அதை அமெரிக்கா விரும்பினால் மட்டும் தனியாக நிறைவேற்றிவைப்பது சாத்தியமில்லை என்றும் இவ்விஷயமாக இதர நாடுகளும் தன்னுடன் ஒத்துழைக்கவேண்டும் என்று ட்ருமன் விரும்புகிறார் என்றும் சொல்லப்படுகிறது.

கேப்-கெய்ரோ ரயில்வே

நியூயார்க், ஜன. 3—

ஆப்பிரிக்காவுக்கு குறுக்கே கேப் டவுனிலிருந்து கெய்ரோ வரை ரயில் போட தயாரிக்கப்பட்ட பூர்வாங்க சர்வே முடிந்துவிட்டதென்றும் இதை அமெரிக்க அதிகாரிகளும், பிரிட்டிஷ் காலனி மந்திரி கிரீச் ஜோன்ஸும் பரிசீலனை செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

அந்த ரயில் ஏற்பட்டால் ஆப்பிரிக்காவுக்கு மட்டுமின்றி உலகிற்கே பலத்த அனுகூலம் ஏற்படும் என்று சொல்லப்படுகிறது.

வட நாட்டில் திராவிட மொழிகள் இடம் பெறுமா?

தோழர் ராஜேந்திர பிரசாத்தின் குழப்பமான பதில்

தென்னாட்டுத் தேசீய தோழர்களுக்கு அர்ப்பணம்

"இந்தி மொழி பேசுவோர் உள்ள மாகாணங்களில் ஒரு திராவிடமொழி கட்டாய விஷயமாகச் செய்வது நல்லதா, இல்லது விரும்பத்தக்கதா என்பது எனக்குத் தெரியாது ஆனால் இன்னொரு மொழி கற்பதை அவர்கள் கண்டிப்பாக உற்சாகப்படுத்த வேண்டும்."

இது, சென்னைக்கு வந்திருக்கும் டாக்டர் ராஜேந்திரபிரசாத் அவர்கள் வெளியிட்டிருக்கும் கருத்தாகும். "இந்த பள்ளிக்கூடங்களில் இந்தி மொழி கட்டாயமாகக் கற்பிக்கப் படுவதோல், வடநாட்டில் திராவிட மொழிகளில் ஏதேனும் ஒன்று கட்டாயமாகக் கற்கச்செய்வதை தாங்கள் ஆதரிப்பீர்களா?" என்று ஒரு பத்திரிகை நிருபர் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார் தோழர் ராஜேந்திர

விருந்தினராகத் தமிழ் நாட்டுக்கு வருகை தந்திருக்கும் தோழர் ராஜேந்திரரை, மொழிப்பிரச்சினையைக் கிளப்பித் திணறடிக்கும் நிலையிலுள்ளது தமிழ் நாட்டு அரசியல் நிலை.

திராவிடத்தை ஒப்புக்கொள்ளாதவர்கள், திராவிட மொழிகளை ஒன்றாக எண்ணுவதை ஒப்புக் கொள்ளும் அளவுக்கு நிலைமை மாறியிருப்பது கவனிக்க வேண்டியதே. இது வேறு புறமிருக்க.

நிருபர் கேட்ட கேள்விக்குத் திட்டமான பதில் சொல்ல முடியாமல் இந்திய அரசியலை நிர்ணயித்த அரசியல் நிபுணரைச் சகாதேவனுக்கு, 'நல்லதா விரும்பத்தக்கதா என்பது எனக்குத் தெரியாது" என்கிறார் அவர். திராவிட நாட்டில் இந்தி கட்டாயமாகப்புகுத்தப்படுகிறது இச்செயல் விரும்பத்தக்கதா நல்லதா என்பதை எண்ணிப் பார்க்கும் தேசியத் தலைவர்கள் இங்கும் இல்லை, வடநாட்டிலும் இல்லை. அந்த அளவுக்குத் திராவிட நாடு கீழ் தாழ்ந்து கிடக்கிறது. ஆனால், திராவிட மொழிகளில் ஒன்றை வடநாட்டில் புகுத்த மனமும் துணிவில்லை. திராவிட மொழி ஒன்று வடநாட்டாரால் கட்டாயமாகக் கற்கப்படவேண்டும் என்பதைக் கண்ணியமாக ஒப்புக் கொள்ள மனமில்லை தோழர் ராஜேந்திரர். ராஜேந்திரரின் இத்தகைய குழப்பமான கருத்தைக் கண்ட பிறகேனும், இந்த 'தென்னாட்டுத் தேசியத் தலைவர்கள் நாட்டு மொழிக்கு தக்க இடம் தேட முன்வருவார்களா என்று கேட்கிறோம்.

பர்மாவுக்கு கம்யூனிஸ்டு சீனாவின் நிபந்தனை

லண்டன், ஜன. 3—

சீனக் கம்யூனிஸ்டு சர்க்காரை அங்கீகரிக்க பர்மா முன் வந்ததை யொட்டி பர்மாவும் சீனாவும் ராஜதந்திர உறவு ஏற்படுத்திக் கொள்வதற்கு முன் பீகிங்கில் பேச்சுவார்த்தைகளை நடத்த சீனக் கம்யூனிஸ்டு அயல் நாட்டு மந்திரி சோ-என்-லாய் சில நிபந்தனைகளை விதித்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்விஷயமாக ஆஸ்திரேலியா அயல் நாட்டு மந்திரி ஸ்பெண்டர் தன் கருத்துக்களை மனம் விட்டு வெளியிடுவாரென்று கூறப்படுகிறது இதிலிருந்து பர்மாவுக்கு காமன்வெல்த் நாடுகள் உதவியளிக்க வேண்டும் என்ற பிரச்னை இம்மாநாட்டில் முக்கிய இடம் பெறும் என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் மாடவில் இஸ்ரேல் போலீஸ்

லண்டன், ஜன. 3—

பிரிட்டிஷ் மாடலில் தன் போலீஸ் படையை அமைக்க இஸ்ரேல் சர்க்கார் நிர்மாணித்திருக்கிறது இதற்காக போலீஸ் இலாகா டைரக்டரும் இஸ்ரேல் பிரதம மந்திரி பென்குரியனின் குமாரனுமான அமாஸ்குரியன் ஸ்காட்லண்ட் யார்ட் முறைகளை அறிந்து வருவதற்காக லண்டன் சென்றிருக்கிறார்,

தெ. இ. முதியோர் கல்வி வாரம்

சென்னை மந்திரிகள் வேண்டுகோள்

சென்னை, டிச. 31—

பிப்ரவரி 3ந் தேதி முதல் கொண்டாடப்படவிருக்கும் தென்னிந்திய முதியோர் கல்வி வார விழாவில், சென்னை வாசிகளும் சேர்ந்து கொள்ள வேண்டுமென, மந்திரிகள் மாதவமேனனும் ரேச் விட்டோரியாவும் சேர்ந்து ஒரு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

மாகாணத்திலுள்ள எல்லா முதியோர்களையும் படித்தவர்களாக்க ஆண்டொன்றுக்கு ஒரு கோடி ரூபாய் தேவையாகுமென்றும் இந்திய சர்க்கார் உதவியும் கூட ரூ. 3 லட்சம் தான் தற்போது சேருகிறதென்றும், ஆகையால் மக்கள் தங்களுடைய கன்னமர்சாக தாங்களே இந்த இயக்கத்தை மேற்கொள்ள வேண்டுமென்றும் மந்திரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

விசுவாசமற்றோர் மீது நடவடிக்கை

ஹெல்ஸின்கி, ஜன. 3—

ருஷ்யாவிடம் விரோத மனப்பான்மை காட்டும் சுமார் 300 பின்னிஷ் மக்களைத் தன்னிடம் ஒப்படைத்துவிடவேண்டும் என்று ருஷ்யா கூறியிருப்பதாகத் தெரிகிறது. ருஷ்யாவுடன் பின்லாந்து செய்துகொண்டுள்ள பரஸ்பர உடன்படிக்கை கௌரவிக்கப்படுகிறது என்பதை ருசுப்பிக்க இது செய்யப்படவேண்டும் என்று ருஷ்யா கோருகிறதாம். பின்லாந்து இதுவிஷயமாக யோசித்து வருகிறது.

பிரபல மனோதத்துவ பின்னிஷ் லேகர் ஒருவர் பாவியோரா பின்ஸினில் மீண்டும் நடவடிக்கை வரவேண்டும் செய்யும் ருஷ்ய தூண்டுதலே இது என்று கருதப்படுகிறது.

பிரிட்டிஷாரைக் குடியேறச்செய்ய கனடா முயற்சி

ஆட்டவா, ஜன. 3—

பிரிட்டிஷார்கள் கனடாவில் குடியேறச்செய்யவும், அப்படி வருபவர்கள் சிறிது மூலதனத்துடன் வரும்படி பிரிட்டன் செய்வதற்கு, பிரிட்டிஷ் சர்க்காருக்கு கடன் உதவி அளிப்பது பற்றியும் கனடா சர்க்கார் யோசித்து வருவதாகத் தெரிகிறது. —ஞோப்.

தி. மு. கழகப் பொதுக்கூட்டங்கள்

—(0)—

கோவை-செல்வபுரம்

கோவைசெல்வபுரம், டிச. 18-

செல்வபுரம் தி. மு. கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் டிச. தேதி ஞாயிறன்று பிரக்கணக்கான மக்களின் முன்னிலையில் வெகு சிறப்புற நடந்தேறியது.

துவக்க விழாவிற்கு அழைக்கப்படிருந்த தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் ஏதோ காரணத்தாலோ வராமையினால் கோவைமாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டத்திற்கு வந்திருந்த தோழர்கள் என், வி. நடராசன், பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோரைக் கொண்டு கொண்டாடப்பட்டது.

செல்வபுரம் மாரியம்மன் கோவில் மைதானத்தில் பெருந்திரளான மக்கள் கூடியிருக்க விழா 6 30 மணிக்கு ஆரம்பமாயிற்று.

விழாவிற்குக் கோவை மாவட்ட தி. மு. கழகப் பொதுச் செயலாளர் பெத்தாம்பாளையம்தோழர் பழனிச்சாமி அவர்கள் தலைமை தாங்கி, கழகக் கொள்கையை விளக்கிப் பேசினர் பின்னர் ஈரோடு தோழர் சங்கரய்யா அவர்கள், தி. மு. கழகத்தின் மீது சர்க்கார் தொடுக்கும் அடக்குமுறை அம்புகளுக்குப் பயந்தவர்கள் அல்ல நாங்கள் எனக்கூறி அவற்றைக் கண்டித்து, திராவிடர்கள், கழகத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமெனப் பேசினர் அடுத்து கோவைத் தோழர் கே சிவசாமி அவர்கள் திராவிட இயக்கம் இதுநாள்வரை செய்து வந்த செய்துவரும் சேவையைப்பற்றியும். நம் இயக்கத்தை எதிர்த்து வரும் தோழர்களுக்குப் பாடம் கற்பிக்கும் முறையிலே எச்சரித்தும், திராவிடம் பிரியவேண்டியது பற்றியும், அதற்காக எங்கள் உடலிலே ஓர் சொட்டு இரத்தம் உள்ள வரைப்போராடியேதீருவோம் என உருக்கமாகப் பேசினர் இறுதியாக தி மு. கழக அமைப்புக்குழு செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகத்தைத்துவக்கி வைத்து, திராவிடம் பிரிய வேண்டியதின் அவசியத்தை பற்றியும், நமது மாகாண சர்க்காரை மத்திய சர்க்கார் நடத்துவதற்கு நமது சர்க்கார் நடந்துகொள்ளும் கேடுகெட்ட முறையைப்பற்றிக் கண்டித்தும், நமது கொள்கை வெற்றிபெற்றால் இன்பத் திராவிட ஆட்சி நடக்க இருக்கும் முறைபற்றியும், இறுதியில் தொழிலாளர்களும், விவசாயிகளும் படும் கஷ்டங்களை விளக்கமாக எடுத்துக்கூறி அவர்களது துயர் துடைப்படவும், மக்களாட்சி மலரவும் திராவிடம் பிரிந்தால்தான் முடியுமென்றும், தெளிவாக நகைச்சுவையுடன் ஒன்றரை மணி நேரம் உருக்கமாகப் பேசி முடித்தார். நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது. (வி-உ)

கொமரலிங்கம்

கொமரலிங்கம், டிச. 27—

24—12—49 மாலை திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்கவிழாப் பொதுக்கூட்டம் மிக்க ஆர்வத்தோடு நடந்தேறியது.

சுற்றுப்புற கிராமங்களிலிருந்து, இயக்கத் தோழர்கள் ஏராளமாக வந்திருந்தனர். உடுமலைத் தோழர் தங்கவேலு கூட்டத்திற்கு தலைமை வகித்தார். தலைவர் முன்னுரைக்குப் பின் கோபி ஜி என். ராஜு, செல்வநாதன், தமிழ் அரசு ஆகியோர் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்கள்.

தலைவர் முடிவுரைக்குப்பின், நன்றிகூற, கூட்டம் இனிது முடிந்தது. (வி-உ)

சேத்துப்பட்டு-வ. ஆ.

சேத்துப்பட்டு, டிச. 28—

வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சேத்துப்பட்டில் 26-12-49 திங்கட்கிழமையன்று மிகச் சிறப்பான முறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் துவக்க விழா நடைபெற்றது. சுற்றுப்புற கிராமங்களிலிருந்து ஏராளமான மக்கள் குழுமியிருந்தனர். ஒலிபெருக்கி கருவி அமைக்கப்பட்டிருந்ததனால் மக்கள் மிக அமைதியுடன் கூட்டத்தைக் கேட்டுக்கொண்டிருந்தனர்.

கூட்டத்திற்கு உள்ளூர் தோழர் தே. த. கோவிந்தன், அவர்கள் தலைமை வகித்து "சேத்துப்பட்டுக்கு ஓர் உபநிலையம் வேண்டிய அவசியம்" பற்றிப் பேசினர்.

தோழர் கா. சீனிவாசன் அவர்கள், இனிமையானதாக நாட்டுப்பண் பாட, சிறிது நேரம் பேசினர்.

இருவத்திபுரம் தோழர் மா. கா. இராசமாணிக்கம் அவர்கள் அடுத்தபடியாக நம் கழகத்தில் ஏற்பட்டுள்ள பிளவை எதிர்கள் பயன்படுத்திக் கொள்வதைக் கண்டித்து, எச்சரிக்கை செய்துவிட்டு, நாம் அடைந்ததாகக் கூறப்படும் சுதந்திரம் சக்திமிகப்பான சூழ்ச்சியின் கொத்துக் செல்லப்பட்டது என்பது பற்றியும், இந்தச் சுதந்திரத்தில் விவசாயி, வியாபாரி, தொழிலாளி, கூலிக்காரர்கள் ஆகியோர் நிலைமை எப்படி இருக்கிறது என்பதை விளக்கிவிட்டு, மக்களின் சமூக வாழ்வில் இவை எல்லாம் ஒழிந்து, நாம் இன்பத் திராவிடம் அடைவது எப்படி என்பது பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

கடைசியாக இருவத்திபுரம் தலைவர் கோவிந்தன் அவர்கள் பேசுகையில், இந்த அரசாங்கத்தை "புன்னூர் ராஜ" ஆட்சிக்கு ஒப்பிட்டு, அந்த அரசு எப்படி ஆராயாமல் எதற்கெடுத்தாலும் தீர்ப்புக்கூறி வந்ததோ, அதுபோல இந்த அரசாங்கமும் எந்தச் சிறு குற்றத்தைப் பற்றி பேசினாலும் நாத்திகர் என்றும், துரோகிகள் என்றும், தேசத்துரோகிகள் என்றும் பெரும் பாக்கியமற்ற தீர்ப்பளிக்கிறது என்று சுதந்திரம் கதி, இந்த நாட்டு மக்கள் எப்படி இருந்தவராகவும் முஸ்லீம்களாகவும் (இந்த நாத் கொள்கையால்) மாற்றமடைந்தனர் என்பதை விளக்கியும், இந்த 1950-ம் ஆண்டிலேயும், ஒரு சாதாரண சட்டத் தொகுப்பு மசோதாவுக்கு எப்படி எப்படி இந்தப் பார்ப்பனர்கள் சலசலப்பு செய்கின்றனர் என்பதைச் சுட்டிக் காட்டியும், நம்மீது ஆட்சியாளரால் ஏவப்படும் அடக்குமுறைப் பாணங்களைக் கண்டித்தும், நம் எதிர்கால ஆக்க வேலைபற்றியும், நமது நம் கட்சித் தோழர்கட்குள் இருக்க வேண்டிய ஒற்றுமை புணர்ச்சிபற்றியும் மிக விளக்கமாகப் பேசினர்

செயலாளர் நன்றி கூறுதலுடன் விழா வெற்றிகரமாக முடிவுற்றது (வி-உ)

அழகனுபுரம்

அழகனுபுரம், டிச. 25—

24—12—1949 சனிமாலை ஆறுமணிக்கு கன்னன்புதூர், தோழர் ச. கன்னிப்பெருமாள் அவர்களின் தலைமையில், திராவிட முன்னேற்றக்கழக ஆரம்ப விழா சிறப்பாக நடந்தேறியது. தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட அழகான பந்தல்மேடை சிறப்பாக அமைக்கப்பட்டிருந்தது கூட்டத்திற்கு ஒலிபெருக்கி அமைக்கப்பட்டிருந்தது அணியை சுற்றுள்ள பல கிராமங்களிலிருந்தும் திரள்திரளாக மக்கள் குழுமியிருந்தனர் நகர திராவிட முன்னேற்றக்கழகம் (நாகர்கோயில்) உறுப்பினர் தோழர் ஆ. குமாரவேலு, நஞ்சில் மாவட்ட தி. மு. கழக அமைப்பாளர் தோழர் வி. எம். ஐ ன். மேல்பாடி கழகத் தலைச்செயலாளர் தோழர் என். ஆறுமுகம் முதலியோர் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கது. கழகப் பொதுச்செயலாளர் தோழர் இரா. ஆண்டி அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த எல்லோரையும் வரவேற்றார்.

தலைவர் தனது முகவுரையில் கழகம் கண்டதன் நோக்கத்தைப் பற்றியும், அது நாட்டிற்கு ஆற்றி வரும் தொண்டைப்பற்றியும் அனைவரும் ஆதரிப்பது திராவிடர்கள் கடமை என்று குறிப்பிட்டார்.

பின் தோழர் மீ. துரைசாமி அவர்கள் கழக உறுப்பினராக இல்லாமலிருந்தும், கழக இலட்சியங்களை ஆதரித்தும் பாராட்டியும், ஆதரவு கொடுக்க பொது மக்கள் கடமைப்பட்டுள்ளார்கள் என்றும் பேசினர்கள்.

அதன் பின்னர் பேசிய தோழர் தேவ வீரகண்டியன் அவர்கள் இந்த சபையில் இந்நாட்டு மக்களின் சமூக பொருளாதார அரசியல் முன்னேற்றத்தில் மிகுந்த கொண்டு முழுமூச்சாக நின்று உழைத்த, உழைக்கின்ற ஓர் இயக்கமான தி. மு. கழகம்—அதனால் பொது மக்கள் கழகத்தை முழு ஆதரவைக் காட்டும் பிரிவினைக்குக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார் அதைத்தொடர்ந்து தோழர் திருமலை கண் அவர்கள் கட்சியின் அவசியம் இட்டதை எடுத்துரைத்து விளக்கிப் பேசி, ஜனநாயகத்தின் போர்வையில் காங்கிரஸ் நடத்தும் ஆட்சியின் ஊழலை எடுத்துக்காட்டி புரட்சிகரமாக சுமார் மூன்றுமணி நேரம் பேசினர்.

கடைசியாக தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், வைதீக நாட்டம்களிடையே மேடையிலே ஏறிப் பேசினர், சமுதாயம் பொருளாதாரம் அரசியல் என்ற மூன்று துறைகளிலும் திராவிடம் செழிக்கத் தெளிவு பெற்று அதற்கு ஒரு வழியைத் தேடுவதே "திராவிட நாடு பிரிவினை" என்றுகூறினர். மேலும் தொடர்ந்து பேசுகையில், "கல்லுடைக்காத மலை பிளக்காத காடுவெட்டாத, கழனி உழாத ஆரியக்கூட்டம் பிறர் உழைப்பில் வாழ்ந்து அதைச் சுரண்டும் வர்க்கம்—திராவிட—உழைக்கும் வர்க்கத்தை உறிஞ்சும் காட்சி, இந்நாட்டின் வரலாறு அமைப்பு கூடாது என்பதுதான் திராவிட நாட்டு பிரிவினையின் மூல முழக்கம்" என்றும், 'ஆண்டவர்கள், உரிமை பெற்றவர்கள் இந்நாட்டுக்குரியவர்கள்—திராவிடர்கள்-ஓட்டாண்டிகளாக-தேய்ந்து ஓடி, கூலிகளாக செல்லாக்காசுகளாக அண்ட வந்தவர்கள், ஒண்ட இடம் கேட்டவர்கள் மாடு மேய்க்க வந்த கும்பல்—நாட்டின் நாயகர்கள்—அதிபர்கள்—ஆள நாம் ஆட்பட இந்த நாட்டின் சரித்திரம் அமையக்கூடாது என்பதுதான் இக்கழகத்தின் ஜீவநாடி" என்றும்; வேற்று நாட்டின் ஆதிபத்ய மொழியை கலைக்களைச்சார்ந்ததைக் குறிப்பிட்டு ஏன் திராவிடநாடு இப்படி என்று கூட்டத்தில் கேள்வியை எழுப்பினர் ஒவ்வொரு நாட்டிற்கென்று தனி அரசியல், படை, சட்டதிட்டங்கள், எல்லைக் கோடுகள் முதலியன இருக்கும்போது நமக்கு இருக்கக் கூடாதா என்று கேட்டார் அக் கேள்விக்கும் பதில்தான் நாட்டுப் பிரிவினை என்று சுமார் 2-மணி நேரம் பேசி முடித்தார்.

தலைவர் முடிவுரையின் பிறகு கண்மணி இரா. ஆண்டி அவர்கள் நன்றிகூறலோடு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்திலே குழுமியிருந்த மக்கள் சொற்பொழிவுகளை மிக அமைதியாக இருந்து கேட்டனர். அவர்கள் கண்களிலே எழுச்சியின் ஒளி ரேகையிட்டது. மலர்ந்த முகத்தோடு திரும்பினர் ஒவ்வொருவர் உதடுகளும் "வாழ்க தி. மு. கழகம்" என்ற ஒலியை எழுப்பின அமைதி நிறைந்த அக்கிராமத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம்

அம்முழக்கம் எதிரொலித்தது. கூட்டத்தின் மகத்தான இந்த வெற்றிக்கு காரணமாக இருந்த பெரியார்கள் ஆ இராசையா, சி. கன்னியப்பன் அவர்களைப்பற்றி பொதுமக்கள் பாராட்டி பேசிக்கொண்டே சென்றனர் (வி-உ)

கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்கம்

—

நகரசபை அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுகோள்

சென்னை, டிச. 31—

சென்னை கார்ப்பரேஷன் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் கூட்டம் சங்க கட்டிடத்தில் நடைபெற்றது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

சென்னை கார்ப்பரேஷன் தொழிலாளர்சங்கத்தின் தலைவராக பிரபு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கார்ப்பரேஷன் தொழிலாளர்களின் குறைந்த பட்ச சம்பளம் சம்பந்தமாய், கார்ப்பரேஷன் அளித்த உறுதியை நிறைவேற்றுவதற்கு வற்புறுத்துவதுடன் கல்கத்தா, பம்பாய் நகரங்களில் நடத்தது போல் இங்கு சென்னையிலும் இது விஷயமாய் சர்க்கார் கமிட்டி ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென இக்கமிட்டி கேட்டுக்கொள்ளுகிறது.

இவ்விஷயமாய் முதன்மந்திரி காமராஜரைச் சந்திக்க ஒரு தூது கோஷ்டி அனுப்புவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

—

பற்றுக்குறைப் பகுதிகளுக்கு அரிசி 'சப்ளை'

சென்னை, ஜன. 3—

சென்னை மாகாணத்திலுள்ள பற்றுக்குறை ஜில்லாக்களான செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, திருநெல்வேலி, ராமநாதபுரம், செல்லாதிப்ராம், மலபார் சித்தூர் முதலிய வைகளுக்கு 1949 டிசம்பரில் தஞ்சாவூர் ஜில்லா, அரிசியை சப்ளை செய்த மாகாணத்திலேயே முதன்மையிடம் பெற்றிருக்கிறது.

உபரி ஜில்லாக்கள் டிசம்பரில் அரிசி அளித்ததின் புள்ளி விவரங்கள்: தஞ்சை ஜில்லா 14500 டன்கள், மேற்கு கோதாவரி 100 டன்கள், குண்டூர் 700 டன்கள், நெல்லூர் 300 டன்கள்.

பாகிஸ்தானில் எழுத்துரிமைக்குப் பாதுகாப்பு

——(0)——

ராமராஜ்யத்தில்...?

கராச்சி, ஜன. 1—

பொதுஜன பந்தோபஸ்து சட்டத்தின் கீழ், பத்திரிகைகள் மீது எவ்விதநடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்று, பாகிஸ்தான் சர்க்கார் அறிவித்துள்ளனர்.

பொதுஜன பாதுகாப்பு சட்டப்படி பாகிஸ்தானில் பத்திரிகைகள்மீது நடவடிக்கை எடுக்க போலீசாருக்கு முழு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் பத்திரிகைகள் மீது எவ்விதநடவடிக்கையும் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது என்று பாகிஸ்தான் சர்க்கார் உறுதிமொழி தந்துள்ளனர்.

தாலி இழந்த காளி!

உளுந்தூர்பேட்டை, டிச. 26—

எரிப்பாளையத்தில் பள்ளிகொண்டிருக்கும் காளியம்மனின் கழுத்திலிருந்த 2-பவுன் மதிப்புடைய தாலியை, யாரோ ஒரு பக்தன் களவாடிக்கொண்டு போய்விட்டான். இது விஷயமாக அம்மன் கோவில் பூசாரி பழனியாண்டி என்பவரைக் கைது செய்து ரிமாண்டில் வைத்திருக்கின்றனர்.

அச் செய்தியைக் கேட்ட மக்கள் சிலர், மகா சக்தி வாய்ந்தவளான காளியம்மன் தன் மாங்கல்யத்தைப் பறிகொடுத்துவிட்டு, தனிக்கிறாள். தன் கழுத்திலிருந்த தாலியைக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தியற்ற காளியம்மன், பல கோடி மக்களை எவ்வாறு காப்பாற்றுவாள் என்று பொருள் பொதிந்த கேள்விகேட்டுச் சென்றனர். (ஏ-நி)

ஜனவரி 26 - அரசியலால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற காரியங்களுக்கு பயன்படும்படியான சட்டத்தை இயற்றும்படி இம்மாநாடு சர்க்காரை வற்புறுத்துகின்றது. முன்:— கே. கே. நீலமேகம்; வழி:— பெத்தாம்பாளையம் பழனிச்சாமி

6 ஏற்கனவே நிகழ்ந்த உலகப் போரினால், விளைந்த தொல்லைகளுக்கும், கஷ்டநஷ்டங்களுக்கும் மக்கள் ஆளாகியுள்ள இன்றைய நிலையில், மீண்டும் உலகப் போர் மூளும் விதமாக வல்லரசுகள் நடந்துகொள்ளும் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. முன்:—டி. கே. சீனிவாசன்; வழி:—டி. எம். பார்த்தசாரதி.

7. ஏதேச்சதிகாரத்தினின்றும் விடுதலை பெற்றுள்ள புதிய சீனக் குடியரசையும் இந்தோனேஷியா குடியரசையும் இம்மாநாடு வரவேற்பதுடன், அந்நாட்டு மக்களுக்கும், அவற்றின் தலைவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது. முன்;- இரெ. இளம்வழுதி; வழி:- எம். எஸ். சிவசாமி.

8. அமெரிக்க முதலீட்டை இந்திய சர்க்கார் வரவேற்கும் முறையில் நடந்து கொள்வதால், புதிய டாலர் ஏகாதிபத்தியம் ஒன்று உருவாகுவதற்கு வழிவகை செய்து கொடுப்பதாகவே முடியுமாதலால், அப்போக்கைக் கைவிடும்படி இந்திய அரசினரை இம்மாநாடு எச்சரிக்கின்றது. முன்:-மா இளஞ்செழியன்; வழி:-இரா. சு. சங்கப்பழம்.

9. ஜமீன்தார்களுக்குத் தரப்படும் நஷ்டஈடு அவசியமற்றதென்பதுடன், அப்படித் தர நேர்ந்தாலும், நியாயமான அளவில் கடன் பத்திரம், வழங்கலாமேயன்றி, ரொக்கமாகக் கொடுப்பது நாட்டின் இன்றைய பொருளாதாரத்தைப் பெரிதும் பாதிக்கும் என்று இம் மாநாடு சர்க்காருக்குஎச்சரிக்கைசெய்கின்றது. முன்;—கே. ஏ. மதியழகன்; வழி:—எஸ் ஆர். சுப்பிரமணியம்.

10 காங்கிரஸ் ஆட்சிபாளர் நாட்டின் முக்கிய தொழில்களைத் தேசியமாக்காமல் தட்டிக்கழித்து வருவதோடு தொழில் முதலாளிகளின் போக்குக்குப் பாதுகாப்பு அளித்து, பொது மக்களின் நன்மைக்குக் கேடு விளைவிப்பதை இம் மாநாடு மிகமி வன்மையாகக் கண்டிக்கின்றது. எடுத்துமொழிந்தவர்:— தலைவர்.

11. இந் நாட்டுப் பள்ளிச் சிறுவர்களுக்கு இந்தியைக் கட்டாயபாடமாகத் திணிக்கும் எந்தத் திட்டத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாதென்பதை, இம்மநாடு அரசியலார்க்கு அறிவுறுத்துகிறது. எடுத்து மொழிந்தவர்:— தலைவர்.

12 திருச்சி வானொலி நிலையத்தில், தமிழ் மக்களின் பலத்த எதிர்ப்புக்கும், கண்டனத்துக்கும் உள்ள இந்தி மொழியைத் தந்திரமாகவும் சூழ்ச்சியாகவும் புகுத்தி, வந்தேமாதரம் என்று பரப்பி வருவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், இனி வணக்கம் என்றே கூற வேண்டும் என்று சர்க்காருக்கு வற்புறுத்துகின்றது. எடுத்துமொழிந்தவர்:— தலைவர்.

13. அரசாங்கத்தார் இந்தியை 4, 5-ம் படிவங்களுக்கு விருப்பப் பாடமாக வைத்திருந்தும், அதைப் பயிலவில்லாத மாணவர்களுக்குச் சிறப்புக் [illegible] கொடுக்க மறுத்து, இந்தியைக் கட்டாயப் பாடமாக வைத்து நடத்தும் தலைமை ஆசிரியர்களின் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. முன்:—தில்லை வில்லாளன்; வழி:—ஏ. சங்கரய்யா.

14. தேச விடுதலை ஒன்றையே கொள்கையாய்ப் பேசி தேசத்தில் 12 சதவீதத்தினருக்கு மட்டுமே ஓட்டுரிமை இருந்த காலத்தில் மெஜாரிட்டி பெற்ற ஒரு கட்சிக்காரர்கள், இத்தேசத்தின் எதிர்காலத்தைப் பல்வகைகளிலும் கட்டுப்படுத்தும் ஒரு அரசியல் அமைப்பை ஏற்படுத்துவதை இம்மாநாடு கண்டிக்கிறது, வயது வந்தோருக்கு வாக்குரிமை ஏற்பட்ட பிறகு அமையும் ஒரு அரசியல் நிர்ணய சபை மட்டுமே, மக்களின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாகவும் மக்களைக் கட்டுப்படுத்தக் கூடியது ஒன்றாகவும் இருக்க முடியும் என்று, இம்மாநாடு தீர்மானிக்கிறது. முன்:—சி. பி. சிற்றரசு; வழி:—ஈரோடு அப்பாவு

14-அ. 1950 ஜனவரி 26-ந் தேதி முதல் அமுலுக்கு வரப்போகும் புதிய அரசியல் திட்டத்தில், மாகாண உரிமைகள் நிலைகுலைக்கப்பட்டிருப்பதை கண்டிப்பதுடன், அத்திட்டத்தின் மூலம், திராவிட நாட்டு மக்களுக்கு எந்த வகையிலும், நன்மை ஏற்படாதென கருதுவதோடு, திராவிட நாடு தனி அரசாக அமையவேண்டுமென்பதே தக்க வழி யென்பதை இம்மாநாடு உறுதிசெய்கிறது—முன்:-டி. ஷண்முகம்; வழி:—குடந்தை. ராங்குசம்.

15. தொழிலாளர்களின் கூட்டுச் சக்தியை நசுக்கும் வகையில் அரசியலாரின் பக்கபலத்தாலும், வடநாட்டுப் பெரும் முதலாளிகள் உதவியாலும் தோற்றுவிக்கப்பட்டுள்ள தேசிய தொழிற் சங்க காங்கிரசின் நடவடிக்கைகளை இம் மாநாடு கண்டிக்கின்றது. முன்:-ஏ. வி. பி. ஆசைத்தம்பி; வழி:—கோபிராஜ்

16. இந்திய சட்டசபையில் சர்க்காரால் கொண்டுவரப்பட்டுள்ள இந்து சட்ட திருத்த மசோதாவுக்கு இம்மாநாடு தனது முழு ஆதரவையும் அளிப்பதுடன், வைதிகர்களின் கூப்பாட்டுக்குப் பயந்து விட்டுக் கொடுக்காமல், அப்படியே நிறைவேற்ற வேண்டுமென்று வற்புறுத்துகின்றது. முன்:— க. அன்பழகன்; வழி:—ச. பொருட்செல்வி ராமாமிர்தத்தம்மையார்.

17. கள்ளிறக்கும் தொழிலே கதியென்று வாழ்ந்து, இன்னொழிப்பால் கதி கெட்டு நிற்கும் பல லட்சம் தொழிலாளர்களுக்கும் காலதாமதம் செய்யாமல் உபகாரப் பணமும், தொழிலும் கொடுக்க வேண்டுமாய் அரசியலாரை இம் மாநாடு கோருகிறது. எடுத்து மொழிந்தவர்:— வே. அ. வள்ளிமுத்து (தலைவர்)

18. மதுவிலக்குச்சட்டத்தைத் திருத்துவதென்ற பேரால் அச் சட்டம் கேலிக்கூத்தாகப் போகும்படி சென்னை சர்க்கார் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை இம் மாநாடு கண்டிக்கிறது. எடுத்து மொழிந்தவர்.— தலைவர்.

18-அ. மதுவிலக்குப் பிரசாரகர்கள் என்ற முறையில் 442 காங்கிரஸ்காரர்களுக்கு மக்களின் வரிப் பணத்திலிருந்து ஊதியம் கொடுத்து கட்சிப் பிரசாரம் செய்ய முற்பட்டுள்ள சென்னை காங்கிரஸ் சர்க்காரின் போக்கை இம்மாநாடு கண்டிக்கிறது. எடுத்துமொழிந்தவர்:-தலைவர்

19. இம்மாகாணத்தில் சுமார் 5½ லட்சத்திற்கு அதிகப்பட்ட கைத்தறி நெசவுத் தொழிலாளிகள், தங்கள் தொழிலுக்குத் தகுந்த பாதுகாப்புக் கொடுக்கப்படாததின் காரணமாக இன்றையதினம் வறுமையால் பாதிக்கப்பட்டு மிகவும் அவதியுறுகின்றனர். இந்நிலையை மாற்றியமைக்க சென்னை அரசியலார் போதுமான நடவடிக்கை எதுவும் எடுத்துக்கொள்ளாதது கண்டு இம்மாநாடு மிகவும் வருந்துகிறது. இந்நிலைமை நீடித்தால், இத்தொழிலே அழிந்துவிடுமென்று இம்மாநாடு அஞ்சுகிறது. ஆகவே, இத்தொழிலுக்குத் தகுந்த பாதுகாப்பளித்து, வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மில் துணிகளுக்குத் தகுந்த கட்டுப்பாடுவிதித்து, சாகுந்தருவாயிலுள்ள இத்தொழிலையும், அதை நம்பியுள்ள 5 லட்சம் குடும்பங்களையும் காப்பாற்றும் பொறுப்பை உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சென்னை அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது. முன்:—அ. சித்தையன்; வழி:—டி. பி. அழகமுத்து.

20. திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கையின் ஒரு அம்சமாக, நாட்டில் சீர்கெட்டுள்ள கலைப்பகுதியை, மக்களின் முன்னேற்றத் துறைக்கான வகையில் சீர்படுத்தி நாடகக் கலை மூலமாக, கழகக் கொள்கையினைப்பரப்பும் பொறுப்பை, நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி அவர்கள் ஏற்றுப் பணியாற்ற வேண்டுமென்று இம்மாநாடு அவரைக் கேட்டுக்கொள்ளுகிறது. முன்:—முல்லைக் கோவை, எம். பி. வடிவேலு; வழி:— ஏ. கே. வேலன்.

21. எழுத்துரிமை, பேச்சுரிமை ஆகியவைகளைப் பறிக்கும் வகையில், திராவிட இயக்கப் பத்திரிகைகள், புத்தகங்கள், நாடகங்கள் இவற்றிற்கு அரசியலார் தடை உத்திரவை விதிப்பதுடன் பத்திரிகை—புத்தக ஆசிரியர்கள், அச்சகத்தார் ஆகியோர் மீதும், வழக்குத் தொடரும் போக்கை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. முன்:—இரா. நெடுஞ்செழியன். வழி;—மு. கருணாநிதி, குடந்தை எஸ். சே. சமி, காஞ்சி, கல்யாணசுந்தரம்.

22. மறைந்த மாவீரர் உடையார்பாளையம் ஆசிரியர் வேலாயுதம் அவர்கள் கொலையுண்டது பற்றிய வழக்கை மீண்டும் விசாரணைக்குக் கொண்டுவந்து, உண்மைக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதி காண வேண்டுமாய், இம் மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது. எடுத்துமொழிந்தவர்; தலைவர்

இந்த இருபத்திரண்டு தீர்மானங்களும், அதன் உட்பிரிவுகளும் மாநாட்டுப் பிரதிநிதிகளால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் தனித்தனியே ஒவ்வொன்றும் பெருத்த கைவொலியினிடையே நிறைவேறப் பட்டன.

போகிற போக்கில்...!

“கடுமையாக உழையுங்கள்: மக்களுக்கு நேருவின் புத்தாண்டுச் செய்தி”

—செய்தித்தலைப்பு

பேஷ்! எவ்வளவு அருமையான செய்தி! உழைத்து உருக்குலைந்த உழைப்புக்கேற்ற ஊதியமின்மையால் இராப்பகல் பட்டினிகளையே இடைவிடாத் தோழராகக் கொண்டு சோம்பித்திரியும்(!) பல லட்ச பாட்டாளிப்பொதுமக்களுக்குப் பண்டித நேருவின் செய்தி சஞ்சீவி மலையையொத்ததேயாகும்! பட்டினியால் பரதவிப்போர் இனி இரண்டு முறுக்காக ஈரத்துணியைத் திரித்து வயிற்றில் கட்டிக்கொண்டு, உற்பத்திப் பெருக்க வேலைக்கு உணர்ச்சிப் பெருக்கோடு உழைத்துத் திரிவரென்பது உறுதி. “மிகக் கடுமையாக உழையுங்கள்” என்ற அடுத்தாண்டு செய்தி விடுத்துப் பொறுப்பைக் கிண்டிவிடுவார், நேரு என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடைசிச் சொட்டு இரத்தம் இருக்கும்வரை உழையுங்கள்; உழைப்பு உங்கள் பிறப்புரிமை; ஊதியத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்; அப்படிக் கவலைப் படுவது பச்சை சுயநல மன்றோ’ என்று நேரு பிரகடனம் விடுவாரென்றும் நம்பப்படுகிறது!

எதிர் பாராத இடங்களிலிருந்தெல்லாம் இந்த ஜனவரி பிறந்தன்று புத்தாண்டு செய்திகள் மலர்ந்துள்ளன. நாமிருப்பதை நானிலத்தவருக்கு ஞாபகப்படுத்தவேண்டுமே யென்பதற்காகச் சிலர், இந்த சந்தர்ப்பத்தில் ஏதாவதேனும் சொல்ல வேண்டுமே யென்பதற்காக சிலர் சொல்வதற்குத்தான் வேறொன்றுமில்லையே, இதையாவது சொல்வோமென்று சிலர், வேறு வாய்ப்பும் வசதியுமில்லையாதலால், இதையாவது ஒரு வாய்ப்பாகக் கொண்டு எதையாவது சொல்லித் தீர்க்கக் கொள்ளலாமென்று சிலர்—இந்த முறையில் அவரவரும் தங்கள் தங்கள் வேட்கைகளையும், பொறுப்புகளையும் (!) நிறைவேற்றிக் கொள்கின்றனர், மேலும் பல்லாண்டுகள் அப்பெரியோர்கள் வாழ்ந்து, புத்தாண்டுச் செய்திகளை விடுத்துக் கொண்டே இருக்க வேண்டுமென்பதே தனது புத்தாண்டுச் செய்தியாகுமென்கிறார் தோழர் நல்லெண்ணம்!

‘உணவு உற்பத்தியைப் பொதுநல சேவையாகக் கருதுக’

—ராஜேந்திரபிரசாத்

தேசபக்தத் திருக்கூட்டத்தாரோடு உணவு உற்பத்தி உழவர்களையும் ஒரே வார்த்தையில் இணைத்துவிட்டாரே அரசவுள்ளம் படைத்த டாக்டர் பிரசாத்! ராஜேந்திரபிரசாத்தின் இப்பிரகடனத்தைப் பொட்டி, இனி ‘வெல்பேர் ஆபீசர்’ பதவி முதல் ஈறாக எல்லாப் பதவிகளுக்கும் உழவர்கள் போட்டியும் வலுத்து விடுமென்று ஊர்ஜிதமாகாத செய்தியொன்று பரவி வருகிறதாம்!

* * *

“எக்ஸ்பிரஸ் ரயில் நதிக்குள் விழுந்தது: பலம் இடிந்ததால் நேர்ந்த வினை”

—செய்தித் தலைப்பு

கம்யூனிஸ்டுகள் கட்டிய பாலமாயிருக்குமோ?

* * *

“அண்ணாமலை சர்வகலாசாலை மாணவர்களின் பணிவு: பட்டினியை நிறுத்தினர்”

—செய்தித் தலைப்பு

“பசி வந்திடப் பத்தும் பறந்துபோம்; பராபரமே!

* * *

‘இந்திய ராணுவத்தின் கன்டோன்மென்டில் உள்ள 7-வது பீல்டுரெஜிமென்டைச் சேர்ந்தவர்கள் சென்ற தீபாவளியன்று ‘அல்லி-அர்ஜுனா’ என்னும் நாடகத்தை நடித்தினா!

—செய்தி

வீரச் சுவை ததும்பும் இதிகாசப் பகுதியைத் தேர்ந்தெடுத்த வீரர்களின் இலக்கிய வரலாற்றறிவை வர்ணிக்க, ஆயிரம் நாபடைத்த ஆதிசேஷனாலும் முடியாதென்றால், இந்த ஒரு நாபடைத்த உலகத்தின் பாரத்துக்கா முடியப் போகிறது! இன்னொரு காரியம் செய்ய வேண்டும் நம் வீரர்கள்! போர்க்களத்தில் அன்று கிருஷ்ண பரமாத்மா, அர்ஜுனனுக்கு கீதாபதேசம் செய்தாரல்லவா, அந்தக் கட்டத்தையும் கிருஷ்ணா—அர்ஜுனா என்ற பெயரில் நடித்து விடவேண்டும். அப்போது தானே எதிரியை நயவஞ்சகமாகத் தாக்கிக் கவிழ்க்கும் சாமார்த்தியத்தை தாங்களும் பெற ஏதுவாகும்! ‘வாலி சம்ஹாரமும்’ நல்ல பொருத்தமான நாடகமேயாகுமென சிபார்சு செய்கிறார் ஒரு அகிம்சாவாதி!

பஸ் மோட்டார் பாகங்கள்

லண்டன், ஜன. 3 — உல்வர்ஹாம்டனிலுள்ள கய் கம்பெனி தயாரிக்கும் பஸ், மோட்டார் பாகங்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு, பம்பாயில் மஹீந்திரா என்ஜினியரிங் கம்பெனியில் இணைக்கப்பட்டு முழுவண்டிகளாக செய்யப்படும் என்றும் இதற்கான ஒப்பந்தம் இவ்விரு கம்பெனிகளிடையே கையெழுத்தாகியிருக்கிறதென்றும் கூறப்படுகிறது.

திருச்சி மாநாட்டில்

நகைச்சுவை அரசர் தந்த இசைவிருந்து

திருச்சி மாவட்ட தி. மு. க. மாநாட்டின் தொடக்கத்தில், திராவிடத்தின் ஈடும் எடுப்புமற்ற நகைச்சுவையரசர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், தம் "வில்லுப் பாட்டு" இசையரங்கு குழுவினருடன், மாநாட்டிற்கு என்றே கட்டப்பட்ட இனிய இசைப் பாட்டுகளைச் சிறக்க இசைத்துக் காண்பித்தார்.

இடையிடையே, கதைப் போக்கில், பாட்டுகளுக்கு விளக்கமுரைத்து மாநாட்டினரை மகிழ்ச்சிப் பெருங் கடலில் ஆழ்த்தினர்.

அவர் பேசுகையில், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா மாபெருங்கூட்டம், சென்னையில் நடைபெறும்போது, சென்று கண்டுவிட்டு, மிகக்க களிப்போடு வீடு திரும்பி, வில்லுப் பாட்டு இசைக் கருவிகளை மகிழ்ச்சிப் பெருக்கால் இயங்க வைக்கும்போது, அவற்றிலிருந்து எழுந்த ஓசைகள் ஒன்று சேர்ந்து, தமக்கு ஒரு விளக்கத்தையும், ஆறுதலையும் தந்ததாகக் குறிப்பிட்டார். வில்லினைத் தட்டிப்பாக்கும்போது "தும, தும" என்ற ஓசை கிளம்பிற்றும். குடத்தின் வாயைத் தட்டும்போது "பம், பம்" என்ற ஓசை எழுந்ததாம். மிருதங்கத்தை அடிக்கும்போது "தீம், தீம்" என்ற ஓசை ஒலித்ததாம். உடுக்கையை அடிக்கும்போது "தோம், தோம்" என்ற ஓசை எழும்பிற்றும். இவை நான்கையும் ஒன்றாகக் கேட்கும்போது "தும் பம் தீம் தோம்" "துன்பம் தீர்ந்தோம்", "துன்பம் தீர்ந்தோம்" என்ற கருத்தைத் தமக்கு அளித்தது என்றும், திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிற்று என்றவுடனே, "துன்பம் தீர்ந்தோம்" என்ற தெளிவு நிலை எல்லோர்க்கும் ஏற்பட்டுவிட்டது என்றும் அழகுபட அரிய முறையில் எடுத்துக் கூறினார்கள்.

நகைச்சுவையரசர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் பாடிய இசைப் பாட்டுகள் கீழே தரப்பட்டுள்ளன. அவை தோழர் என். எஸ். கே. அவர்களும், தோழர் எஸ். கே. சாமி அவர்களும் சேர்ந்து புனைந்தவையாகும். மிகக் குறுகிய இரண்டொரு நாள் முயற்சியில் இந்த அரிய பணியினைச் செய்து, மாநாட்டினரை மகிழ்வித்தத் தோழர் என். எஸ். கே., அவரது குழுவினர் ஆகியோர்க்கு மாநாட்டு வரவேற்புக் குழுவினர் தம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

* * *

திராவிடமென்பது பாரினிலே உயர்
செல்வத் திருநாடு
விரோதி யென்றாலும் விருந்திடத் தேடும்
புராதன நன்னாடு

வாழ்வில் மாந்தர் தவறுவிதம் வள்ளுவர்
மாமறை தந்த நின்னாடு மத
வம்பர் பொய் நூலுக்கு மாண்புதந்த கவி
கம்பன் பிறந்த இன்னாடு

பாட்டால் உணர்ச்சி யூட்டி பகுத்
தறிவுப் பாதையைக் காட்டி
பாரதிதாசன் கனகசுப்பு
ரத்தினம் பிறந்த நாடு

கல்விப் பெருங்கடல் கல்யாணசுந்தரப்
பேராளனைத் தந்த நாடு
கப்பலோட்டிய சிதம்பரம் பிள்ளை
கண்ணியன் பிறந்த நாடு

தூங்காமை கல்வி துணிவுடைமையென்ற
நீங்காக் குணங்கள் படைத்த
ஆங்காரமான அருமைத் தந்தை
பெரியார் பிறந்த நாடு

தன்மானத்தை நிலைக்கச் செய்யும்
தகைமை மிகவும்கொண்ட தமிழ்
இனத்துக்கு ஒரு கண்ணான நம்ம
அண்ணா பிறந்த நாடு

அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி
வெஞ்சமர் புரிந்த நாடு
அரசியல் ஞானி பன்னீர்செல்வம்
அறிவாளர் பிறந்த நாடு

தன்னல மற்ற உன்னதத் தியாகி
தாலமுத்து நடராசன்
தமிழுக்காக உயிரைத் தந்த
தியாகிகள் பிறந்த நாடு

* * *

விருத்தம்

திராவிடத்தின் உணர்ச்சியெலாம்
திரண்டெழுந்து ஒரு குழந்தையாய்வந்து
தீவிரமாய் செயல் புரிய முன்னேற்றக்
கழகமெனும் பெயரைக் கொண்டாய்

பாரறிய உனது புகழ்பேச
பல்லாயிரம் பேர் கூடி நிற்க
பேரறிவிலாத யானும்
பெருமை மிகும் உனது புகழ் பாடுவேனே

* * *

செப்டம்பர் பதினேழில்
சென்னை என்னும் தலைநகரில்
செகத்தை மூழிக்கவைக்கும்
செயல் புரியப் பிறந்ததொரு குழந்தை

கட்டிலிலே படுக்காது
கண்ணயர்ந்து தூங்காது
காரியம் இல்லாமல்
நேரத்தைப் போக்காத குழந்தை

திராவிடக் கழகம் பெற்ற
முன்னேற்ற மென்ற இந்தக் குழந்தை
தேர்ந்த கல்வி ஞானமுடன்
தெளிவாக அரசியலைச் சொல்லும்

* * *

உடலிலே கட்டுக்கோப்பும்
உள்ளத்திலே உறுதியும்
கல்விலுமே பெரிய தெரு
கண்ணோட்டம் உடையவனும்

எழுத்தாலும் சொல்லாலும்
செயலிலும் மவல்லவனும்
எதிரிகளும் கண்டுமலைக்கும்
ஏற்றமான நலங்களும் உள்ளவனும்

அஞ்செழுத்து மந்திரத்தை
அடிப்படையாய்க் கொண்ட வாழ்வு
அனைவருக்கும் வேணுமென்று சொல்லுது
கழகம்

அனைவருக்கும் வேணுமென்று சொல்லுது.

அஞ்செழுத்துச் சொன்னதென்ன
அன்புடனே கேளுமையா
அறிவின் மிக்கோர் வழிதனைப் பின்பற்றி
நடந்து

அழகுபட வேணுமென்ற கருத்து

தேவாரந்தன்னில் சொன்னதா
அஞ்செழுத்து?—போலிச்
இருபானந்தவாரி சொன்னதா?

மணிவாசகத்தில் சொன்னதா
அஞ்செழுத்து?—படித்த
மறைமலையடிகள் சொனனதா?

நடமாடும் கோயிலுக்கே நன்மைசெய்யா
மடாதிபதி வாயில வந்ததா?

* * *

முதலெழுத்து "வ" னு
முதலுங்கடுத்த எழுத்து இ "ள்" ளன்னு
மூன்றுவது எழுத்து அது "ளு" னு
அஞ்சு எழுத்து "வள்ளுவர்" நமக்கு
அழகு நீதி தந்தவர் அவர்
செஞ்ச குறள்படி நடக்கத் திராவிட
முன்னேற்றக்கழகம் சொல்லுது.

நெடுஞ்செழியன் அன்பழகன்
இளம்வழுதி கணேசன்
இளஞ்செழியன் மதியழகன்
நடராசன் சித்தையனும்
சிற்றரசு காஞ்சி மணிமொழியார்
சம்பத்து சாமி நீலமேகம்
ராமசாமி ஆசைத்தம்பி
முத்து ராசு தங்கப்பழம்
கருணாநிதி சீனிவாசன் சிவ
சாமி கல்யாணசுந்தரமும்
இராமாமிர்தத்தம்மாள் சத்தியவாணிமுத்து
பெத்தாம்பாளையமும் வள்ளிமுத்தும்

சொற்பொழிவையாற்றுவார்
நற்கருத்தையோதுவார்
திராவிடம் உயர்ந்திடவே
தேர்ந்தபணிசெய்குவார்

ஆற்றல் மிகும் திராவிட முன்னேற்ற
கழகம் வாழியவே—

நிரந்தரக் கண்காட்சி!

லண்டன், ஜன. 3—

இந்தியாவின் பல்வேறு கலைகள், சினிமாப்படங்கள் முதலியவைகளை விளக்க ஒரு நிரந்தர கண்காட்சி லண்டனில் வீவிஸ்டர் சதுக்கத்தில் ஏற்படுத்தப்படவிருக்கிறது. ஆசிய இன்ஸ்டிடியூட்டின் ஆதரவில் இது நடைபெறும்.

இதை நிர்வகிக்கவிருப்பவரான தோழர் டி. பி. செளத்திரி குளோஸ் நிருபரிடம் கூறுகையில், இந்திய கலைகளின் பெருமையை பிரிட்டியாருக்கு விளக்குவதற்காகவே இது ஏற்படுத்தப்படுகிறதென்றும், இதன் ஆதரவில் நடைபெறும் நடன நாடகங்களுக்கு ஆசிய நாடுகளின் கலை வல்லுநர்கள் வரவழைக்கப்படுவர் என்றும், பின்னர் கிழக்கோடி நாடுகளும் இதில் சேர்த்துக்கொள்ளப்படும் என்றும் கூறினர்.

இஸ்ரேலில் வேலை நிறுத்தம்

ஜெருசலம், ஜன. 3—

சென்ற மாதத்தில் இஸ்ரேலில் எங்குத்திரும்பினாலும் ஒரேஸ்டிரைக் மயமாக இருந்தது. மரமிசம், சோதனை இதா அத்யாவசியப் பொருள்கள் கிடைக்காததால் பல ஹோட்டல்கள் மூடப்பட்டன.

ரயில்வே தொழிலாளர்கள் அதிக சம்பளம் கோரி கிடைக்காததினால் வேலை நிறுத்தம் செய்தனர். சுமார் 1000 பேர்கள் வேலைக்குத் திரும்பவில்லை.

வேலையில்லாத தற்கால கணக்கான யூததொழிலாளர்கள் 'உணவு வேண்டும், வேலைவேண்டும்' என்ற ஒலிகளுடன் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

அறிவிப்பு

ரெஜினா மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வைகளை நாசமாக்கி, அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் புட்டி 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும் G. பழனியப்பமுதலியார், மதுரை.

வானொலி

(5-1-50 வியாழக்கிழமை)

சென்னை

[211·3 மீட்டர்கள்]

காலை:

7-5 தமிழில் செய்திகள்
7-30 எம். டி. பார்த்தசாரதி—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-50 என். ராஜரத்னம்—வயலின்

பிற்பகல்:

12-30 உயர்தரப் பள்ளிகளுக்கு
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு
2-45 நூல்வகை (இசைத்தட்டு)

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-30 சே. எல். ராமகோடி பிள்ளை—நாகஸ்வரம்
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-20 ஹேமலதா, பிரேமலதா—பாட்டு

இரவு:

7-00 கேள்வி நேரம்
7-15 தமிழில் செய்திகள்
7-30 சினிமாப் பாட்டுகள் (இ. த.)
8-15 வைத்தியநாத பாகவதர்—பாட்டு
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 சினிமா விமர்சனம்
9-30 எல். துரைசாமி — பாட்டு
10-30 முடிவு

திருச்சி

[395·8 மீட்டர்கள்]

காலை:

7-15 தமிழில் செய்திகள்
7-30 எம். எல். நடராச பாகவதர்—பாட்டு
8-00 ஆங்கிலத்தில் செய்திகள்
8-15 மீனும்பாள் ராமஸ்வாமி—வீணை
8-30 டி. கே. பட்டம்மாள் இ. த.

பிற்பகல்:

12-30 உயர்தரப் பள்ளிகளுக்கு
1-00 சதம்பம் (இ. த.)
1-30 ஆங்கிலத்தில் செய்திகள்
1-40 பெண்ணுலகம்
2-00 தமிழில் செய்திகள்
2-15 உயர்தரப் பள்ளிகளுக்கு

மாலை:

4-00 ஆரம்பப் பள்ளிகளுக்கு
5-00 மீனும்பாள் ராமஸ்வாமி—வீணை
6-00 ஆங்கிலத்தில் செய்திகள்
6-15 எம். எல். நடராச பாகவதர்—பாட்டு
6-30 கிராம நிகழ்ச்சிகள்

இரவு:

7-15 தமிழில் செய்திகள்
7-30 சித்ரகானம் (இசைத்தட்டு)
8-00 சி. பெரியசாமி — பேச்சு
8-15 சென்னையில் உள்ளபடி
9-00 ஆங்கிலத்தில் செய்திகள்
9-15 ராகங்கள்
9-35 சிங்கர் கேட்டவை (இ. த.)
1[illegible] முடிவு.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press. 2/45, Muthumari Chetty Street, Madras-1.